Registered with the Registrar of News Paper
For India under R.N.I. 11967/'67

வருட சந்தா ரூ.1/-

வருகையின் தூதன்

பரிசுத்த வேதாகமம்

Those who turn the world upside down. Acts.17:6.

Vol. 66 | துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமலும், ... சங்.1:1 | செப்டம்பர் 2020 | No.9

ஜெபிக்கிற ஒரு ஜனம்

A people of prayer

Trey Ken

ஜெபிக்கிறவர்கள் மேலோட்டமாக அல்ல, எல்லாவற்றிற்காகவும் ஆழமாக ஜெபிக்க வேண்டும் பிலி.4:6,7. நம் வாழ்வு இடைவிடாத ஜெபத்தால் அனல் மூட்டப்பட்டதாயிருக்க வேண்டும். இடைவிடாமல் ஜெபம் செய்வது என்பது ஒரு நிமிடம் கூட விடாமல் ஜெபிப்பது அல்ல, ஆனால் ஜெபத்தை விட்டுவிடாமல் தொடர்ந்து ஜெபிப்பதாகும்.

மத்.20:30-34 வசனங்களில் இயேசு செய்த அற்புதம் இடைவிடாத ஜெபத்திற்கு வல்லமையான எடுத்துக் காட்டாயிருக்கிறது (வசனங்களைப் படிக்க)

இதிலிருந்து நான்கு பாடங்களைக் கற்றுக் கொள்ளலாம்.

பாடம்1 :-

இயேசுவைக் கூப்பிட வேண்டும் :

சோர்ந்து போகாத இடைவிடாத ஜெபத்திற்கு இரு ஆதாரங்களுண்டு. அவை தேவையும், தேவனுடைய சத்துவ மளிக்கும்ஆவியுமாகும். இச்சம்பவத்தில் வரும் இரு கண்பார்வையற்றவர்களும், தேவைநிறைந்தவர்களும், புண்பட்டவர்களும், நம்பிக்கையிழந்தவர்களுமாயிருந்தனர். எனவேதான் இயேசுவை சத்தமாய் அழைத்தனர். தேவன் நமது பலவீனங்களை அறிவார். உத்தம ஜெபம் தேவனுடைய விருப்பம், நமது தேவை ஆகியவற்றிலிருந்து எழும்புகிறது.

அனேகர் தங்களை அழுத்துகிற தேவைகளால் பாரமடைகிறார்கள். நம்மை தேவையுள்ளவர்களாக தேவன் வைத்திருக்கிறார். அவைகளுக்காக ஜெபிக்கவும் கூறியிருக்கிறார். நமது நம்பிக்கையற்ற நிலை, நம்மைக் கூப்பிடவும், தீர்வுக்கான வழிகளைத் தேடவும் காரணமாயிருக்கிறது. இவ்வாறு தேவைகள் நம்மை தேவனிடம் ஓட்டுகின்றன. அவர் நம்மீது அக்கரையுடையவரும், ஜெபத்திற்கு எப்படி பதில் அளிக்க வேண்டுமென்று அறிந்தவருமாயிருக்கிறார். அவரது பதில் அவருக்கு அதிக மான மகிமையையும் நமக்கு அதிக நன்மையையும் அளிக்கிறது.

இந்த இரு பார்வையற்றவர்களைப் போல நாமும் இயேசுவை சத்தமிட்டுக் கூப்பிட வேண்டும். நமது தேவை ஜெபத்திற்குத் துணையாயிருந்தாலும், நம்மிலுள்ள தேவ ஆவியானவரே நாம் இடைவிடாமல் ஜெபிக்க உதவி செய்கிறார். அவர் நம்மில் கிரியை செய்து கொண்டிருப்பதால் நாம் ஜெபத்தை விட்டுவிடுவதில்லை. ஜெப வீரர்களாக நாம் மாற எபேசி. 5:18-ன் படி நாம் ஒழுங்காக ஆவியால் நிரப்பப்பட வேண்டியது அவசியம் என்று பவுல் வற்புறுத்துகிறார். தேவ ஆவியானவர் ஜெப ஆவியானவர். நமது தேவைகள் நம்மை தேவனிடம் ஓட்டும்போது தூய ஆவியானவர் நாள்தோறும், காலங்கள் தோறும், பருவங்கள்தோறும் நம்மை நிரப்பிக் கொண்டிருக்கிறார். நமது பெலவீனங்களிலும் நாம் ஜெபிக்க ஆவியானவர் உதவி செய்வதாக பவுல் ரோமருக்கு எழுதுகிறார் ரோமர் 8:26. எனவே நமது பலவீனம் தூய ஆவியானவர் நம்மை நிரப்புவதற்கு ஏதுவாயிருக்கிறது.

பாடம்2 :-

ஜெபத்திற்குத் தொடர்ந்து சவால்கள் எழும்பும் :

எரிகோவின் மக்கள் கூட்டம் இந்த இரு கண்பார்வையற்றவர்களுக்கும் எதிராக செயல்பட்டது. அவர்கள் அமைதிகாக்கும்படி அக்கூட்டம் அவர்களை கடிந்து கூட்டளையிட்டது மத். 20:31. நாம் ஆண்டவரை சத்தமிட்டு அழைக்கும் போது பிசாசு, சூழல்கள், பதிலற்ற நிலை, நமது நண்பர்கள் கூட நம்மை அமைதிப் படுத்த முயற்சிக்கலாம்.

இவைகளுக்கு உடன்பட்டு சிலர் ஜெபிப்பதை நிறுத்தலாம். அதுவே இயேசு நம்மிடம் மறுபடியும் மறுபடியும் இடைவிடாமல் ஜெபம் பண்ணச் சொல்லுவதற்கான முக்கிய காரணம். **நாம் கேட்டுக்கொண்டும், தேடிக்கொண்டும் தட்டிக் கொண்டும் இருப்போமானால்** தேவன் கேட்டு இரக்கம் காண்பிப்பார்.

எனது ஜெபங்களை அமைதிப் படுத்த முயற்சிக்கும் மூன்று சோதனைகள் உண்டு. அவை :- **1. தேவன் எனது ஜெபத்தைக் கேட்கவில்லை** என்ற எண்ணத் தைத்தரும் சோதனை **2. நான் ஜெபித்துக் கொண்டேயிருப்பதால் எதுவும் நடப்பதில்லை** என்ற எண்ணத் தைத் தரும் சோதனை. **3. அதிக வேலையிலீடுபடுவதால் ஜெபிக்க நேரமில்லாத** சோதனை.

இன்றுவரை எனது மிகப்பெரிய போராட்டம் வேலை நெருக்கடியை, இருதயத்திலும், மனதிலும், அனுதின அட்டவணையிலுமிருந்து அகற்றுவதே. ஜெபிப்பதைவிட முக்கியமானது எதுவு மில்லை என்று என்னை எப்போதும் நினைவுபடுத்திக் கொண்டேயிருக்கின்றன. S.D. கார்டன் கூறியது போல, "நீங்கள் ஜெபித்த பின்பு ஜெபித்ததை விட கூடுதலான காரியங்களைச் செய்ய முடியும். ஆனால் நீங்கள் ஜெபிக்காவிட்டால் கூடுதலாக எதையும் செய்ய முடியாது."

சத்துரு அல்லது சூழ்நிலை எப்படி உங்கள் ஜெபத்தை தடுக்க முடியும்? இப்போதே என்னோடு சேர்ந்து இந்த எளிய ஜெபத்தைச் சொல்லுங்கள். "இயேசுவே, நான் ஜெபத்தை விட்டு விடாமல் தொடர்ந்து ஜெபிக்க தயவு கூர்ந்து உதவி செய்யும்". அவர் நமது உத்தம ஜெபங்களைக் கேட்டு நாம் ஜெபவீரர்களாக மாற உதவி செய்வார்.

பாடம்3 :-

சவால்கள் உங்களை இன்னும் அதிகமாக ஜெபிக்கச் செய்யட்டும் :

இரு பார்வையற்றவர்களும் தங்களை அமைதியாயிருக்கும்படி அதட்டின கூட்டத்தை எப்படி சமாளித்தார்கள்? அவர்களோ ஆண்டவரே, தாவீதின் குமாரனே எங்களுக்கு இரங்கும் என்று அதிக சத்தமாய்க் கூப்பிட்டார்கள் மத். 20:31.

நமக்கு எதிராக வரும் சவால்கள், பொய்கள், கடினங்கள் ஆகியவை நம்மை அமைதிப்படுத்த முயற்சிக்கும் போது அவை நம்மை அதிகமாக ஜெபிக்கத் தூண்டுவது ஆவியானவரின் செயல். ஆவியானவர் இடைவிடாமல் ஜெபிக்கிறார். நாமும் அவரது மன்றாட்டில் இணைந்து கொள்ள அழைக்கிறார். "எந்த சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம் பண்ணி ....." எபேசி 6:18 என்று பவுல் அறிவுறுத்துகிறார். ஆவியானவர் ஒருவருக்குள் இல்லாவிட்டால் அவர் இடைவிடாமல் ஜெபிக்க முடியாது.

தேவ ஜனத்தின் ஜெபங்களை அமைதிப்படுத்த சத்துரு அனேக தந்திரங்களைச் செய்கிறான். ஏனெனில் ஜெபத்தின் வல்லமை அவனுக்கு நன்றாகத் தெரியும். "ஜெபத்தைத் தவிர வேறு எதற்கும் அவன் பயப்படுவ தில்லை. பரிசுத்தவான்களை ஜெபிக்கா மல் தடுப்பது அவனது ஒரே நோக்கம். ஜெபமில்லாத பணி, ஜெபமில்லாத கல்வி, ஜெபமில்லாத மார்க்கம் இவற்றால்

(4-ம் பக்கம் பார்க்க)

முக்கிய அறிவிப்பு

ஒவ்வொரு மாதமும் 10-ம் தியதிக்குள் பத்திரிகை வரத் தவறினால் உடனே எங்களுக்கு தெரியப்படுத்துங்கள்
மொபைல் : 95432 21008
94897 40295

வருகையின் தூதன்

ஆசிரியர்:
வெஸ்லி தேவதாசன்
(Former Editor : S.Devadason 1955 - 1999)

Advisory Board : T. Peter, D. StanlyJones, S. Thomas Ganesh, Christy Samuel, Christinal P.Mony

இம்மாத பொன்னான சிந்தனை

ஆபிரகாமைப் போல இப்பொழுது எலியா தேவனுக்கு முன்பாக நின்றான். எனவே பரிசுத்த ஆவியானவர் எலியாவின் வாழ்க்கையை **'அவன் ஜெபித்தான்'** என்று இரண்டே வார்த்தைகளில் எழுத முடிந்தது. தேவனுக்கோ மனிதருக்கோ இதைவிட அதிகமாக எந்த மனிதனும் செய்யமுடியாது.

வாக்குத்தத்தம்

கர்த்தர் நித்தமும் உன்னை நடத்தி, மகா வறட்சியான காலங்களில் உன் ஆத்துமாவைத் திருப்தியாக்கி, உன் எலும்புகளை நிணமுள்ளதாக்குவார்;

நீ நீர்ப்பாய்ச்சலான தோட்டத்தை போலவும், வற்றாத நீரூற்றைப் போலவும் இருப்பாய் ஏசாயா 58:11

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே,

பிதாவாகிய தேவனாலும், நம்முடைய இரட்சகராயிருக்கிற இயேசு கிறிஸ்துவினாலும், கிருபையும் இரக்கமும் சமாதானமும் உண்டாவதாக.

2020 செப்டம்பர் மாத தூதனுக்காக என் தேவனை நன்றியோடும், தாழ்மையுடனும் துதிக்கிறேன். அப்போஸ்தலனாகிய பவுல் இவ்விதமாக எழுதுகிறார் : "வெகு மனத்தாழ்மையோடும், மிகுந்த கண்ணீரோடும் ..... எனக்கு நேரிட்ட சோதனைகளோடும், நான் கர்த்தரைச் சேவித்தேன்" அப்.20:19.

தேவனுடைய பிள்ளைகள் மனப்பூர்வமாய் அனுப்பிக் கொண்டிருக்கும் அனைத்துக் காணிக்கைகளுக்காகவும் கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறோம், அவர் நாமத்தில் எங்கள் நன்றியை ஜெபத்தோடு தெரிவிக்கிறோம். **"உதாரகுணமுள்ள ஆத்துமா செழிக்கும்; எவன் தண்ணீர் பாய்ச்சுகிறானோ அவனுக்குத் தண்ணீர் பாய்ச்சப்படும்"** நீதி 11:25.

நீங்கள் கடிதத்திலும், தொலைபேசியிலும் தெரிவிக்கிற ஜெபக்குறிப்புகளுக்காக, கர்த்தர் இரங்குகிறபடி ஜெபிக்கிறேன். 2020 ஜனவரி மாத பத்திரிகை உங்களிடத்தில் இருக்குமானால் தயவுசெய்து எடுத்துப்பாருங்கள். கர்த்தர் என்னை வழிநடத்தினபடி மூன்று காரியங்களை **மாத்திரம்** ஆசிரியர் கடிதத்தில் எழுதியிருப்பேன் :

1. வருகையின் தூதன் (பத்திரிகை பணி)

வங்கி விபரம் :
A/c. Name : **WESLEY DEVADASON,** A/c. No.:2131010118439
United Bank of India, Mead Street, Nagercoil-1 **IFSC Code: UTBI0NGLP05**

2. வருகையின் தூதன் (உபவாச ஊழியம்)

வங்கி விபரம் :
A/c. Name : **WESLEY DEVADASON,** A/c. No.: 370601000002557
Indian Overseas Bank, Court Road, Nagercoil-1 **IFSC Code : IOBA0000063**

3. வருகையின் தூதன் (ஊழிய முன்னேற்ற நிதி)

வங்கி விபரம் :
A/c. Name : **WESLEY DEVADASON,** A/c. No.: 61822200136904
Syndicate Bank, W.C.C. Road, Nagercoil-1 **IFSC Code : SYNB0006182**

ஆனால் தேவ பிள்ளைகளில் சிலர் இவற்றை சீக்கிரமாய் மறந்து, 3+1 நான்கு வங்கிகளில் வருகையின் தூதன் பத்திரிகை பணிக்கு நெட் பேங்கிங் வழியாக காணிக்கை அனுப்ப ஆரம்பித்துவிட்டீர்கள். அதோடு 2-ம் பக்கம் வழக்கமாக அச்சிடப்படும் (Standing matter) விபரங்களையும் கவனிக்கவில்லை.

அன்பானவர்களே, ஊழியம் என்றாலும் கணக்கு (Account) பராமரிக்கப்பட வேண்டும். ஆடிட் (Audit) பண்ணப்பட வேண்டும். எனவே இம்மாதம் முதல் 2-ம் பக்கம் தனியாக அச்சிடாமல், ஆசிரியர் கடிதத்தின் தொடர்ச்சியாகவே வங்கி விபரங்களையும் அச்சிடுகிறேன். தயவுசெய்து கவனமாய் படித்து, அதன்படி செய்யுமாறு மிகவும் அன்பாய் கேட்கிறேன். இவ்விதமான பிரச்சனைகள் நமக்கு மாத்திரமல்ல, நம்மைப் போல் ஊழியம் செய்யும் அனைவருக்கும் நேரிடுகிறது என்பதால், இம்மாதம் முதல் **"மற்ற பத்திரிகைகளில் என்ன எழுதியிருக்கிறது?"** என்ற சிறு துண்டு செய்தியையும் ஆசிரியர் கடிதத்தின் இறுதியில் அச்சிடுகிறேன்.

எழுப்புதல்

(குறிப்பு : தூதனின் செய்திகளை ஜெபத்தோடும், வேத புத்தகத்தோடும் படிப்பீர்களென்றால், இரண்டு மடங்கு ஆசீர்வதிக்கப்படுவீர்கள்)

தேவ ஊழியர் ஒருவர் இவ்வாறு அச்சிட்டுள்ளார் :

எழுப்புதலுக்காக ஜெபித்திடு .....
எழுப்புதலுக்காக பிரசங்கித்திடு .....
எழுப்புதலுக்காக எழுதிடு .....
எழுப்புதலுக்காக உழைத்திடு .....
எழுப்புதலுக்காக கனவு கண்டிடு .....
எழுப்புதல் வந்தே தீரும்!

எழுப்புதல் என்றால் என்ன?

1. தேசம் தேவனுக்கு நேராக திரும்புவது

வேதபாகம் : 1 இராஜாக்கள் 18-ம் அதிகாரம்

அந்திப்பலி செலுத்தும் நேரத்திலே, தீர்க்கதரிசியாகிய எலியா வந்து : ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் தேவனாகிய கர்த்தாவே, இஸ்ரவேலிலே நீர் தேவன் என்றும், நான் உம்முடைய ஊழியக்காரன் என்றும், நான் இந்தக் காரியங்களையெல்லாம் உம்முடைய வார்த்தையின்படி செய்தேன் என்றும் இன்றைக்கு விளங்கப்பண்ணும்.

கர்த்தாவே, நீர் தேவனாகிய கர்த்தர் என்றும், தேவரீர் தங்கள் இருதயத்தை மறுபடியும் திருப்பினீர் என்றும் இந்த ஜனங்கள் அறியும்படிக்கு, என்னைக் கேட்டருளும், என்னைக் கேட்டருளும் என்றான்.

அப்பொழுது கர்த்தரிடத்தில் இருந்து அக்கினி இறங்கி, அந்தச் சர்வாங்க தகனபலியையும், விறகுகளையும், கற்களையும், மண்ணையும் பட்சித்து, வாய்க்காலிலிருந்த தண்ணீரையும் நக்கிப்போட்டது.

ஜனங்களெல்லாரும் இதைக் கண்டபோது, முகங்குப்புற விழுந்து : **கர்த்தரே தெய்வம், கர்த்தரே தெய்வம் என்றார்கள்.**

2. சபை மனந்திரும்புவது

வேதபாகம் : எஸ்றா 9, 10 அதிகாரங்கள்

எஸ்றா இப்படி விண்ணப்பம் பண்ணி, அறிக்கையிட்டு அழுது, தேவனுடைய ஆலயத்துக்கு முன்பாகத் தாழ விழுந்து கிடக்கையில், இஸ்ரவேலில் புருஷரும் ஸ்திரீகளும் பிள்ளைகளுமான **மகா பெரிய சபை** அவனிடத்தில் வந்து கூடிற்று; ஜனங்கள் மிகவும் அழுதார்கள்.

3. தேவன் வானங்களைக் கிழித்து இறங்குவது

வேதபாகம் : ஏசாயா 64-ம் அதிகாரம்

ஆ, உமது நாமத்தைச் சத்துருக்களுக்குத் தெரியப்பண்ணுவதற்கும், ஜாதிகள் உம்முடைய சந்நிதிக்கு முன் தந்தளிப்பதற்கும்,

தேவரீர் வானங்களைக் கிழித்திறங்கி, உருக்கும் அக்கினி எரியுமாப் போலவும், அக்கினி தண்ணீரைப் பொங்கப் பண்ணுமாப் போலவும், பர்வதங்கள் உமக்கு முன்பாக உருகும்படி செய்யும்.

நாங்கள் எதிர்பார்த்திராத பயங்கரமான காரியங்களை நீர் செய்தபோது, நீர் இறங்கினீர், உமது சந்நிதியில் பர்வதங்கள் உருகிப்போயின.

4. உலர்ந்த எலும்புகள் உயிரடைவது

வேதபாகம்: எசேக்கியேல் 37-ம் அதிகாரம்

கர்த்தருடைய கை என்மேல் அமர்ந்து, கர்த்தர் என்னை ஆவிக்குள்ளாக்கி வெளியே கொண்டுபோய், எலும்புகள் நிறைந்த ஒரு பள்ளத்தாக்கின் நடுவில் நிறுத்தி,

அவர் என்னை நோக்கி: மனுபுத்திரனே, இந்த எலும்புகள் உயிரடையுமா என்று கேட்டார்; அதற்கு நான்: கர்த்தராகிய ஆண்டவரே, தேவரீர் அதை அறிவீர் என்றேன்.

அப்பொழுது அவர் என்னைப் பார்த்து : நீ ஆவியை நோக்கித் தீர்க்கதரிசனம் உரை .... என்றார்.

(3-ம் பக்கம் பார்க்க)

(2-ம் பக்க தொடர்ச்சி)

எனக்குக் கற்பிக்கப்பட்டபடி நான் தீர்க்கதரிசனம் உரைத்தேன்; அப்பொழுது ஆவி அவர்களுக்குள் பிரவேசிக்க, அவர்கள் உயிரடைந்து, காலூன்றி, மகா பெரிய சேனையாய் நின்றார்கள்.

5. மகா பெரிய நகரம் பொல்லாத வழியை விட்டுத் திரும்புவது

வேதபாகம் : யோனா 3-ம் அதிகாரம்

அப்பொழுது நினிவேயிலுள்ள ஜனங்கள் தேவனை விசுவாசித்து, உபவாசஞ்செய்யும்படிக் கூறினார்கள்; பெரியோர் முதல் சிறியோர் மட்டும் இரட்டுத்திக் கொண்டார்கள்.

மனுஷரும் மிருகங்களும் இரட்டினால் மூடிக்கொண்டு, தேவனை நோக்கி உரத்த சத்தமாய்க் கூப்பிடவும், அவரவர் தம்தம் பொல்லாத வழியையும் தம்தம் கைகளிலுள்ள கொடுமையையும் விட்டுத் திரும்பவுங்கடவர்கள்.

அவர்கள் தங்கள் பொல்லாத வழியைவிட்டுத் திரும்பினார்களென்று தேவன் அவர்களுடைய கிரியைகளைப் பார்த்து, தாம் அவர்களுக்குச் செய்வேன் என்று சொல்லியிருந்த தீங்கைக் குறித்து மனஸ்தாபப்பட்டு, அதைச் செய்யாதிருந்தார்.

6. சீஷர்களெல்லாம் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படுவது

வேதபாகம் : அப்போஸ்தலர் 2-ம் அதிகாரம்; யோவேல் 2:28-32 ; எண்ணாகமம் 11:24-30

பெந்தெகொஸ்தே என்னும் நாள் வந்தபோது, அவர்களெல்லாரும் ஒருமனப்பட்டு ஓரிடத்திலே வந்திருந்தார்கள்.

அப்பொழுது பலத்த காற்று அடிக்கிற முழக்கம்போல, வானத்திலிருந்து சடிதியாய் ஒரு முழக்க முண்டாகி, அவர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று.

அல்லாமலும் அக்கினிமயமான நாவுகள் போல பிரிந்திருக்கும் நாவுகள் அவர்களுக்குக் காணப்பட்டு, அவர்கள் ஒவ்வொருவர் மேலும் வந்து அமர்ந்தது.

அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின் படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத் தொடங்கினார்கள்.

7. திரள் திரளாய் மக்கள் இரட்சிக்கப்படுவது

வேதபாகம் : அப்போஸ்தலர் 2, 4, 5

அவனுடைய வார்த்தையைச் சந்தோஷமாய் ஏற்றுக் கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள் அன்றைய தினம் ஏறக்குறைய **மூவாயிரம்** பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள்.

வசனத்தைக்கேட்டவர்களில்அநேகர் விசுவாசித்தார்கள்; அவர்கள் தொகை ஏறக்குறைய **ஐயாயிரமாயிருந்தது.**

திரளான புருஷர்களும் ஸ்திரீகளும் விசுவாசமுள்ளவர்களாகிக் கர்த்தரிடமாக அதிகமதிகமாய்ச் சேர்க்கப்பட்டார்கள்.

எழுப்புதல் தாமதிக்கிறது ஏன் என்றால் . . .

கர்த்தருக்குச் சித்தமானால் அடுத்த இதழில் வெளிவரும்.

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.
தேவ கிருபை உங்களோடிருப்பதாக.

உதவி : 94897 40295
அலுவலகம் : 95432 21008
சமயம் : 10-01; 02-06

உங்கள் சகோதரன்,
வெஸ்லி தேவதாசன்
(WESLEY DEVADASON)

ஒரு ஜெபம் - A Prayer

"சர்வ வல்ல ஆண்டவரே, கூடாதவைகள் என்று நான் சொல்லக் கூடியவைகளையும் செய்யும்படி செய்வீராக. அது உமது சித்தமாயிருப்பதால் மிகுந்த உறுதியுடன் உம்மிடம் கேட்கிறேன். உமது திட்டத்தை நிறைவேற்ற தடையாயிருக்கும் எல்லாவற்றிற்கும் என்னை விலக்கிப் பாதுகாரும்.

என் வாழ்விலிருந்து சுயம் அகன்று போகட்டும். நான் வெற்றி பெற்றுவிட்டேன் என்று எண்ணிய வேளைகளில், இன்னும் பழைய சத்துருவின் கட்டுகளிலிருக்கிறேன் என்பதை உணர்ந்து வெட்கமடைந்து தலைகுனிகிறேன். சத்துரு, சத்துவமும் தந்திரமும் உடையவனாகக் கிரியை செய்கிறான். நீர் உலகில் வாழ்ந்த போது தேவாலயத்தை சுத்திகரித்தது போல எனது சரீரமாகிய ஆலயத்தை சுத்திகரியும். விற்கிறவர்களையும் கொள்ளுகிறவர்களையும் துரத்திவிட்டு என் இருதயத்தை ஜெப இல்லமாக மாற்றும்.

உம்மையே சார்ந்து வாழும்படி என்னை போதித்தருளும். நீரன்றி என்னால் ஒன்றும் செய்யக்கூடாது என்பதை அடிக்கடி மறந்துவிடும் பேதையாயிருக்கிறேன்.

"என் எஜமானனே உமது வாசலுக்கு என்னை நடத்தும்
கேட்கிறதற்கு விருப்பமான செவிகளைத் திறந்தருளும்
உமது கட்டுகள் எனக்கு விடுதலை
நான் உமக்குக் கீழ்ப்படிந்து உழைத்து பொறுமையுடன் வாழ்வேனாக."

உமது வசனத்தை நேசித்து அதற்கு சந்தோஷமாகக் கீழ்ப்படி வேனாக. அதன் மூலம் எனது பயபக்தி வெளிப்படுவதாக. ஏதோ சில கற்பனைகளை மட்டும் பொறுக்கியெடுத்துவிட்டு மற்றவைகளையெல்லாம் தள்ளிவிடாதிருப்பேனாக. உமது வார்த்தைகளைப் பொறுமையோடும் உருக்கத்தோடும் படிப்பேனாக. உமது யோசனைகள் எனது வாழ்வுக்குக் கட்டளைகளாகவும், ஆனால் என்னை துக்கப்படுத்துபவை அல்ல என்றும் உணர்ந்து அவற்றை சந்தோஷமாக ஏற்றுக்கொள்வேனாக.

நான் கவலையீனமாகவும், சுயகாரியங்களில் மட்டும் ஈடுபடுபவனாகவும் இராமல் காத்துக்கொள்வீராக. தூய ஆவியானவரின் கட்டுப்பாட்டிற்குள் என்னை முற்றிலும் அர்ப்பணிப்பேனாக. எனது பரம பந்தய ஓட்டத்தில் பாரங்களை இறக்கி வைத்துவிட்டு ஓடுவேனாக. கடைசிமட்டும் ஓடி கிரீடத்தைப் பெற்றுக்கொள்வேனாக. இவை எல்லாவற்றையும் என் இரட்சகரும், ராஜாவுமாகிய இயேசுவின் நாமத்தில் கேட்கிறேன் ஆமென்."

சாத்தானுடைய தீட்டங்களுக்கு இணங்கிப் போகிற படியால் நமது வாழ்வு, தும்பம், அருகாமை, சபைகள், நகரங்கள் ஆகியவை தாங்கள் ஆண்டவரிடம் பெற்றுக் கொள்ள வேண்டிய ஈவுகளைப் பெற முடியவில்லை.

நீ பிரபலமாக விரும்பினால், சந்தோஷத்தைப் பிரசங்கி;
நீ பிரபலத்தை விரும்பவில்லையென்றால் பரிசுத்தத்தைப் பிரசங்கி

- **கடிதங்கள், மணியாடர்கள்** அனுப்ப வேண்டிய முகவரி
  வருகையின் தூதன், நியுபோர்ட் தெரு, நாகர்கோவில் - 629 001
  VARUKAYIN THOOTHAN, Newport Street, Nagercoil-629 001.
  Mobile : 95432 21008, 9489740295, e-mail:varukayinthoothan@hotmail.com
- **காசோலை** *(Cheque & Draft)*
  வெஸ்லி தேவதாசன் என்ற பெயருக்கு மட்டும் அனுப்பும்படி அன்பாய் கேட்கிறேன்.
- **வங்கி** வழியாய் காணிக்கை அனுப்புவோர் (Net Banking) தயவாய் உடனே எங்களுக்கு SMS அனுப்புங்கள், அல்லது அலுவலக செல் நம்பர் 95432 21008 வழியாக தெரிவியுங்கள்.

பத்திரிகை பணி

A/c. Name : **WESLEY DEVADASON,** A/c. No.: 2131010118439
United Bank of India, Mead Street, Nagercoil IFSC Code : UTBI0NGLP05

மற்ற பத்திரிகைகள் என்ன எழுதுகின்றன!

காணிக்கை அனுப்புகிறவர்களின் கவனத்திற்கு

ஊழியத்திற்கு காணிக்கை அனுப்புகிறவர்களில் பெரும்பாலானோர் வங்கி வாயிலாக (e-transfer) காணிக்கை அனுப்பி வருகிறீர்கள். மிக்க நன்றி. நீங்கள் வங்கி வாயிலாக (e-transfer) அனுப்புகின்ற காணிக்கையின் விவரங்களை தொலைபேசி, கடிதம் மற்றும் E-mail வாயிலாக எங்களுக்குத் தெரிவியுங்கள். வங்கி வாயிலாக காணிக்கை அனுப்பின அநேகருடைய விவரங்கள் தெரியவில்லை என்பதால் ரசீது அனுப்புவதில் காலதாமதம் ஏற்படுகிறது. நீங்கள் அனுப்புகின்ற காணிக்கையின் விவரங்களையும், உங்கள் கைபேசி எண்ணையும் (Mobile No.) தவறாமல் எங்களுக்குத் தெரிவியுங்கள். காணிக்கையைப் பெற்றுக்கொண்ட விபரம் அலுவலகத்திலிருந்து SMS மூலம் உடனடியாக உங்களுக்குத் தெரிவிக்கப்படும். நன்றி : இந்திய இல்லந்தோறும் நற்செய்தி - ஜெப செய்தி அறிக்கை

(1-ம் பக்க தொடர்ச்சி)

அவன் பயப்படுவதில்லை. நமது உழைப்பைப் பார்த்து அவன் நகைக்கிறான். நமது ஞானத்தை அவன் பரிகசிக்கிறான். ஆனால் நாம் ஜெபிக்கும்போது அவன் நடுங்குகிறான்" என்று சாமுவேல் சாட்விக் என்ற சிறந்த ஜெபவீரர் கூறியிருக்கிறார்.

எனவே நாம் தேவனோடு ஜெபிப்பதிலும், அவர் சித்தம் செய்து வாழ்வதிலும் அதிக வாஞ்சையுடையவர்களாயிருக்க வேண்டுமே. தேவனைப் பின்பற்றுவதும் சத்துருவின் கிரியையினைத் தோற்கடிப்பதும் நமது மிகப் பெரிய சந்தோஷமாயிருக்க வேண்டும். நமது பட்டணங்கள் சாத்தான் அதிகமாக செயல்படும் இடங்களாகிவிட்டன. ஜெபமில்லாத சபை சாத்தானின் கண்ணியிலகப்பட்டு அவனுக்கு எதிராகப் போராட முடியாமல் தவிக்கிறது. நமது ஜெபக்குறைவைக் குறித்து யாக்கோபு "நீங்கள் விண்ணப்பம் பண்ணாமலிருக்கிறதினால் உங்களுக்குச் சித்திக்கிறதில்லை" யாக்.4:2 என்று எழுதுகிறார்.

சாத்தானுடைய திட்டங்களுக்கு இணங்கிப் போகிறபடியால் நமது வாழ்வு, குடும்பம், அருகாமை, சபைகள், நகரங்கள் ஆகியவை தாங்கள் ஆண்டவரிடம் பெற்றுக்கொள்ள வேண்டிய ஈவுகளைப் பெறமுடியவில்லை. இதற்கு அடிப்படைக் காரணம் ஜெபக்குறைவு என அறியாதிருக்கிறார்கள். இனி அப்படி இருக்கக்கூடாது என்று நாம் எச்சரிக்க வேண்டிய காலம் இது.

தேவனுடைய இராஜ்யம் வரவும், பரலோகத்தில் அவர் சித்தம் செய்யப்படுவதுபோல பூமியிலேயும் செய்யப்படவும் நாம் இணைந்து ஜெபிக்க வேண்டிய காலம் இது.

பாடம் 4 :-

அவரை நோக்கிக் கூப்பிடுகிறவர்களை இயேசு அழைக்கிறார் :-

இந்த சம்பவத்தின் உச்சக்கட்டம், எதிர்ப்பின் மத்தியிலும் கூப்பிட்ட இரு கண்பார்வையற்றோரையும் இயேசு நின்று கூப்பிட்டதாகும். "இயேசு நின்று அவர்களை தம்மிடத்தில் அழைத்து நான் உங்களுக்கு என்ன செய்ய வேண்டும்? என்று கேட்டார். இயேசு மனதுருகி அவர்கள் கண்களைத் தொட்டார். உடனே அவர்கள் பார்வையடைந்து அவருக்கு பின் சென்றார்கள்" மத்.20:32-34.

நாம் இயேசுவைக் கூப்பிடுவதால் நமக்கும் நம்மைச் சார்ந்தவர்களுக்கும் நன்மை கிடைக்கிறது. இயேசு அவர்களை அழைத்து, **"நான் உங்களுக்கு என்ன செய்ய வேண்டும்?"** என்று கேட்டார். இயேசு நமக்கு என்ன செய்ய விரும்புகிறோம்? இதற்கு சரியான பதில் நாம் கொடுக்க வேண்டும். பிறரைப் பற்றிய அக்கரையோடும் ஆத்தும பாரத்தோடும் ஜெபிக்க வேண்டும்.

சத்துரு ஜெபத்தின் வல்லமையை நாம் காணாதபடி நமது கண்களைக் குருடாக்குகிறான். ஜெபம் பரலோகத்தில் எவ்வாறு கண்காணிக்கப்படுகிறது, கனப்படுத்தப்படுகிறது, அங்கீகரிக்கப்படுகிறது என்பதை அனேகக் கிறிஸ்தவர்கள் அறியாதிருக்கிறார்கள்.

தேவன் ஜனங்களை கனப்படுத்துகிறவர். **பரலோகம் நமது ஜெபங்களின் விலையை நன்கு அரியும். நரகம் நமது ஜெபங்களின் வலிமையை உணரும். ஆனால் கிரிஸ்துவின் சரீரமாகிய சபை மட்டும் ஜெபத்தின் மூலம் தேவன் செய்யும் கிரியைகளை அரிந்து கொள்ளவில்லை.**

சில இடங்களில் அனேக போதகர்களும் தலைவர்களும் ஜெபிக்கிற மக்களையும் சபைகளையும் எழுப்பும் அவசியத்தை உணருகிறார்கள். இது நமது பகுதிகளிலும் வேண்டும்.

ஜெபிக்கிற மக்கள் என்பது ஆவியின் வல்லமை நிரம்பிய பிள்ளைகளோடு இணைந்து இடைவிடாமல் ஜெபிப்பவர்கள். நாம் கூப்பிடுவதோடு, எதிர்ப்புகளை வாய்ப்புகளாக பயன்படுத்தி அதிகமாக ஜெபிப்போம். தேவன் எது தேவை என்று நம்மை அழைத்துக் கேட்கும்போது சந்தோஷமடைவோம். ஜெபவீரர் என்ற பெயரைப் பெறுவோம்.

ஜெபவீரர்கள் மாறாத தேவனுடைய வாக்குத்தத்தங்களால் அசைவு பெற்று தூண்டப்பட்டு வல்லமைப் படுத்தப்படுகிறார்கள்.

ஜெபம் ஊழியத்திற்கான கதவுகளை திறக்கிறது

Prayer opens doors for ministry

J. Hudson Taylor

சேவை செய்யப்படுவதற்கான வாய்ப்புகள் எங்கும் காணப்படுகின்றன. எனக்கும் அது விதிவிலக்கல்ல. நம்பிக்கையற்றிருந்த ஒரு இடத்திலே மனந்திரும்புதலை ஏற்படுத்தி என்னை உற்சாகப் படுத்திய ஒரு சம்பவத்தை மட்டும் இங்கு குறிப்பிடுகிறேன்.

ஆத்தும ஆதாயத்தின் சந்தோஷத்தை தேவன் எனக்கு முன்னாலேயே தந்திருக்கிறார். ஆனால் இத்தகைய கடின மானதும் வித்தியாசமானதுமான சூழலில் அந்த அனுபவம் எனக்கில்லை. **தேவனால் கூடாதது எதுவுமில்லை.** எந்த ஒரு மன மாற்றமும் இதுவரை தூய ஆவியானவரின் வல்லமையின்றி நடைபெற்றதுமில்லை.

எதிர்பார்க்க முடியாத சூழலில் கூட ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைப் பெற நாம் ஜெபித்தால் தேவன் கேட்டு அவரது விருப்பத்தை நிரூபிப்பார். இவ்வாறு ஜெபத்தைக் கேட்கிற தேவனது நெருங்கிய உறவைப் பெறவும், அவர் ஒருவரே இரட்சிக்க வல்லவர் என்பதை நாம் நிரூபிக்க வேண்டும்.

சீனாவுக்குச் செல்வதற்கு சற்று முன்னால் எனக்குக் கொடுக்கப்பட்ட அனுதின கடமை, காலில் புண்ணால் பாதிக்கப்பட்ட ஒருவருடைய புண்ணை சுத்தம் செய்து கட்டுப் போட வேண்டும். இந்த நோயாளி தான் சிறிது காலம்தான் வாழமுடியும் என்பதை அறியாதிருந்தான். இதற்கு முன்பாக சிலர் அவனுக்கு இவ்வாறு காயம் கட்டியிருக்கிறார்கள். எனக்கு இந்தப் பொறுப்பு அளிக்கப்பட்டபோது அவனது ஆத்துமாவைப் பற்றிய அதிக பாரம் எனக்கு உண்டாயிற்று. அவனது குடும்பம் கிறிஸ்தவ குடும்பமாயினும் அவன் ஒரு நாஸ்திகனாயிருந்தான். அவனுடைய அனுமதியின்றி அவனுடைய குடும்பத்தார் வேதவசனங்களை வாசிக்கிற ஒருவரை அழைத்து வந்த போது அவன் மிகுந்த கோபத்தோடு அந்த அறையை விட்டு வெளியேறச் செய்தான். அந்த பகுதியிலுள்ள ஒரு போதகரை அழைத்து வந்த போது அவரைப் பேசவிடாமல் அனுப்பி விட்டான். இவன் நம்பிக்கையற்ற பயங்கரமான ஒரு நோயாளி.

அவனை நான் கவனிக்க ஆரம்பித்தபோது அதிகமாய் ஜெபித்தேன். ஆனால் இரண்டு மூன்று நாட்கள் மார்க்கத்தைப் பற்றி நான் அவனிடம் பேசவில்லை. மிகுந்த சிரத்தையோடும் விசேஷித்த அக்கரையோடும் அவனுடைய காலின் புண்களை நான் கவனிக்க ஆரம்பித்தபோது அவனது வேதனை சற்று குறைந்தது. அவன் எனது பணிவிடையை நன்றியுடன் வெளிப்படுத்த ஆரம்பித்தான்.

ஒருநாள் இருதய நடுக்கத்தோடு அவனுடைய நன்றியுணர்வை ஒப்புக் கொள்ளும் விதமாகப் பேச ஆரம்பித்தேன். நான் இப்படியாக சேவை செய்வதின் காரணத்தையும், அவனுடைய ஆத்துமாவின் நிலையையும் கிறிஸ்து மூலம் தேவகிருபை அவனுக்கு வேண்டும் என்றும் கூறினேன். அவன் அதிக முயற்சியுடன் தன் உதடுகளை மூடிக்கொண்டது தெரிந்தது. படுக்கையிலே என் பக்கமாக முதுகைத் திருப்பிக் கொண்டு பேசாமல் படுத்துக் கொண்டான்.

அந்த நோயாளியை என்னால் மறக்க முடியவில்லை. ஒவ்வொரு நாளும் அவனுக்காக நான் தேவனிடம் மன்றாடினேன். அவன் மரிக்குமுன் ஆவியானவர் அவனை இரட்சிக்கும்படி வேண்டினேன். ஒவ்வொரு நாளும் அவனது புண்களைக் கழுகி, கட்டுப்போட்டு அவனது வேதனை சற்று குறையும்போது ஒருசில வார்த்தைகளை பேசிவிட்டு வருவேன். தேவன் அவனை ஆசீர்வதிப்பார் என்ற நம்பிக்கை எனக்கிருந்தது. அவன் ஒரு வார்த்தையும் பேசாமல் கவலையுடன் திரும்பிப் படுத்துக்கொள்வான்.

இந்த நிலை சில காலம் நீடித்தது. என் இருதயம் துவண்டு போயிற்று. நான் அந்த மனிதனுக்கு எந்த உதவியும் செய்ய முடியவில்லை. அவனது இருதயம் கடினப்பட்டு, குற்ற உணர்வு அதிகரிப்பதை நான் உணர்ந்தேன். ஒரு நாள் எனது பணிவிடையை முடித்துவிட்டு என் கைகளைக் கழுகிய பின் அவனது படுக்கையருகில் செல்லாமல் வாசலருகே திகைத்து நின்றேன்.

ஆவியானவர் நம்மில் வாசம் செய்து கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலும் நாம் வளரவும், அனுதினமும் அவரது சாயலைப் பெறவும் விரும்புகிறார்.

வாசலில் சில நிமிடங்கள் நின்று விட்டு அந்த மனிதனைத் திரும்பிப் பார்த்தேன். நான் அவனிடம் பேச ஆரம்பித்ததிலிருந்து அவனது படுக்கை யண்டை செல்லாமல் திரும்புவதில்லை. எனவே அவன் என்னை ஆச்சரியமாகப் பார்த்துக் கொண்டிருந்தான். இன்று நான் அவனிடம் என் ஆண்டவரைப் பற்றி ஒன்றும் பேசவில்லையே என்று எண்ணி அவனைப் பார்த்தேன். என்னால் தாங்க முடியாமல் கண்ணீர்விட்டு அழுதேன். அவன் அருகில் சென்று "நண்பரே, நீங்கள் கேட்டாலும் கேட்காவிட்டாலும் நான் என் மனதிலிருப்பதை சொல்ல வேண்டும்" என்று கூறிவிட்டுக் கண்ணீ ரோடும் மிகுந்த தாழ்மையோடும் நான் அவனோடு சேர்ந்து ஜெபிக்க விரும்பு வதைக் கூறினேன்.

அவன் மறுக்கவில்லை. நான் மகிழ்ச்சியடைந்தேன். உங்களுக்கு விருப்பமானபடி செய்யுங்கள் என்றான். நான் அவன் படுக்கையண்டையில் முழங்காலூன்றி ஆத்துமாவை ஊற்றி அவனுக்காக தேவனிடம் ஜெபித்தேன். அப்பொழுதே ஆண்டவர் அவனது ஆத்துமாவில் ஒரு மாற்றத்தைக் கொடுத் தார்.

இதன் பிறகு ஒவ்வொரு நாளும் அவனோடு பேசி ஜெபித்து வந்தேன். சில நாட்களில் அவன் ஆண்டவராகிய இயேசுவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டான். அந்த அருமை யான மனிதன் தேவமகிமையின் நம்பிக்கையில் களிகூர்ந்ததைப் பார்த்து ஆனந்தமடைந்தேன்.

அவன் 40 ஆண்டுகளுக்கு முன்பாக திருமணத்திற்காக ஆலயம் சென்றதாகவும் அதன் பிறகு எந்த தொழுகை ஸ்தலத்திலும் அவன் சென்ற தில்லை என்றும் அவன் கூறினான். பாவத்தால் கறைபட்ட அவனது ஆத்துமா கழுகி சுத்திகரிக்கப்பட்டு விட்டது. தேவனுக்கும், ஆண்டவராகிய இயேசுவுக்கும் தூய ஆவியானவருக்கும் மகிமை உண்டாவதாக.

சீனாவில் எனது ஆரம்பகால ஊழியத்தில் நம்பிக்கையற்ற சூழ்நிலை களில், நான் இந்த மனிதனோடு சம்பாஷித்ததையும், அவனது மனந்திரும் புதலையும் எண்ணி உற்சாகப்படுத்தப் பட்டுள்ளேன். மக்கள் கேட்டாலும் கேட்காவிட்டாலும் நாம் சொல்ல வேண்டியதைச் சொல்ல வேண்டும்.

மேற்குறிப்பிடப்பட்ட அந்த மனிதன் மனமாற்றத்திற்குப் பின்பு வாழ்ந்து தேவனுடைய கிருபையைக் குறித்து சாட்சி கொடுக்கத் தவறவில்லை. அவனது உடல்நிலை மிக மோசமா யிருந்தும் அவனடைந்த மாற்றத்தால் அவனை கவனிக்கும் கடமை எனக்கு உண்மையான சந்தோஷமாய் மாறிற்று.

இந்த சம்பவத்தை நான் நினைக்கும்போது என் ஞாபகத்தில் வரும் வசனம் "கண்ணீரோடே விதைக் கிறவன் கம்பீரத்தோடே அறுப்பான். அள்ளித் தூவும் விதைகளை சுமக்கிறவன் அழுதுகொண்டு போகிறான், ஆனாலும் தான் அறுத்த அரிகளை சுமந்துகொண்டு கெம்பீரத்தோடே திரும்பி வருவான்". ஆத்துமாக்களைப் பற்றிய பாரமும், கண்ணீரும் நமக்கு உண்டானால் நாம் விரும்பும் பலனைப் பெறுவோம். கேட் கிறவர்களின் இருதயத்தைக் கடின மென்று பாராமல் சொல்லிக் கொண்டே யிருப்போம். சொல்லாவிட்டால் நமது இருதயம் கடினப்படும். நமது பெலவீனம் நமது ஊழிய வெற்றிக்கு தடையா யிருக்கும்.

நமது ஜெபத்தின் மூலம் தேவ வல்லமை

God's power through our prayer

Rich Carmicheal

E.M.பௌண்ட்ஸ் என்பவர் ஜெபத்தின் வலிமையைக் குறித்து "இதன் பலன் மனித இயலுமைக்கு மேலானது. சர்வ வல்ல தேவனால் மட்டுமே அதனைக் கட்டுப்படுத்த முடியும்" என்று கூறியுள்ளார்.

மனிதரால் கூடாத அனேக காரியங்களை நாம் பெற்றுக்கொள்ள மிகுந்த தேவையுள்ள நாட்களில் நாமிருக்கிறோம். தேவனுடைய சர்வ வல்லமை நமது வாழ்வு, குடும்பங்கள், சபைகள், சமுதாயங்கள் எல்லாவற்றிலும் விளங்கவேண்டும். தேவனுடைய ஞானம், ஆதாரம், வல்லமை ஆகிய வற்றை ஜெபத்தின் மூலம் நாம் நாடும் போது சூழ்நிலைகள் மாறுவதை நாம் எதிர்பார்க்கலாம். "நாம் வேண்டிக் கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியை செய்கிற வல்லமையின்படியே நமக்குச் செய்ய வல்லவராகிய கிறிஸ்து" என்று எபேசி.3:20-ல் பவுல் எழுதியிருக்கிறார்.

ஜெபத்திற்கு வரும் அதிரடியான பதில்கள்

யோசபாத்தின் உதாரணத்தைப் பார்ப்போம். யூதாவை முறியடிக்க திர ளான மக்கள் கூட்டுசேனையாக அவனை பயமுறுத்துகிறார்கள் (2 நாளா.20) மனித ரால் நம்பிக்கையற்ற சூழல் அது. ஆனால் யோசபாத் மக்களைக் கூட்டி உபவா சித்து ஜெபித்து தேவனுடைய முகத் தைத் தேடினான். இந்த சூழலை எதிர் கொள்ளுவதில் தனது பலவீனத்தை ஒத்துகொண்டான். "..... எங்கள் தேவனே ..... இந்தத் திரளான கூட்டத்திற்கு முன்பாக நிற்க எங்களுக்குப் பெல னில்லை. நாங்கள் செய்ய வேண்டியது இன்னதென்று எங்களுக்கு தெரிய வில்லை. ஆகையால் எங்கள் கண்கள் உம்மையே நோக்கிக் கொண்டிருக்கிறது" 2 நாளா. 20:12 என்று ஜெபித்தான். தேவன் தமது அளவற்ற வல்லமையோடு பதிலளித்தார். எதிர்பாராத விதத்தில் எதிரி மேற்கொள்ளப்பட்டான்.

நெகேமியா காலத்தில் எருசலே மில் நடைபெற்ற விசேஷித்த மாறுதலை கவனிப்போம். எருசலேமின் சூழல் துக்ககரமாயிருந்தது. "..... சிறையிருப் பில் மீந்திருக்கிறவர்கள் இந்த தேசத்திலே மகா தீங்கையும், நிந்தையையும் அனுப விக்கின்றனர். எருசலேமின் அலங்கம் இடிபட்டதும் அதின் வாசல்கள் அக்கினி யால் சுட்டெரிக்கப்பட்டதுமாய்க் கிடக்கிறது" நெகே.1:3. ஆனால் நெகேமி யாவின் புத்தகத்தை வாசிக்கும் போது பின்பு அலங்கம் கட்டி முடிக்கப்பட்ட தையும் "..... எருசலேமின் களிப்பு தூரத்தில் கேட்கப்பட்டது" 12:43 என்று காண்கிறோம். இந்தப் பெரிய மாற்றங் கள் ஏற்படக்காரணம் ஜெபத்தின் வலிமை என்பது 1:5-11 வசனங்களில் பார்க்கலாம்.

அன்னாளின் ஜெபத்தைக் கவனிப்போம். அவளது வரலாற்றின் ஆரம்பத்தில் அவள் துக்கமும், கசப்பும் நிறைந்தவள். அவள் தேவ சமூகத்தில் தன் இருதயத்தை ஊற்றி ஒரு குழந்தை வேண்டும் என்று ஜெபித்தாள். தேவன் அவள் ஜெபத்தைக் கேட்டு சாமு வேலைக் கொடுத்தார். கர்த்தரிடத்தில் கேட்டுப் பெற்றுக் கொண்டபடியால் சாமுவேல் எனப் பெயரிட்டாள். அவளது துக்கம் களிப்பாக மாறியது 1 சாமு.2:1-10 படிக்க. ஆகிலும் தன் ஜெபத்தின் முழு தாக்கத்தையும், சாமு வேல் இஸ்ரவேலின் பெரிய தீர்க்கதரிசி யாகவும், ராஜாக்களை அபிஷேகம் பண்ணப்போகிறவனாகவும் அவள் அறிந்திருக்கவில்லை. ஜெபத்தின் மிகப் பெரிய வல்லமை இங்கு விளங்குகிறது.

107-ம் சங்கீதம் ஜெபத்தின் வல்லமையைக் காண்பிக்கும் பல்வேறு எடுத்துக்காட்டுகளை உள்ளடக்கியது. மக்கள் பல்வேறு இக்கட்டான சூழ்நிலை களிலும், நம்பிக்கையற்றதுமான நிலை களிலும் காணப்படுகின்றனர். அவர்கள் தேவனை நோக்கிக் கூப்பிடும்போது அவர் தலையிட்டு அவர்களை அவர்களது இக்கட்டுகளிலிருந்து விடுவிக்கிறார். மரண இருளின் நிழலிலிருந்தும், அந்தகாரத்திலிருந்தும், சங்கிலிகளை உடைத்தும் விடுவிக்கிறார் வச.14. தமது வார்த்தையை அனுப்பி குணமாக்கி விடுவிக்கிறார் வச.20. புயலை அமர்த்தி பத்திரமாக வழிநடத்துகிறார் வச.30. அவாந்தர வெளியைத் தண்ணீர் தடாக மாகவும், வறண்ட நிலத்தை நீரூற்று களாகவும் மாற்றுகிறார் வச.35.

என் ஜனங்கள்

2 நாளாகமம் 7-ம் அதிகாரம் ஜெபத்தில் வல்லமையைக் குறித்து இன்னொரு தூண்டுதலைத் தருகிறது. தேவன் ஒரு வாக்குறுதியை அளிக்கிறார். **"நான் மழையில்லாதபடிக்கு வானத்தை அடைத்து, அல்லது தேசத்தை அழிக்க வெட்டுக்கிளிகளுக்குக் கட்டளையிட்டு, அல்லது என் ஜனத்திற்குள் கொள்ளை நோயை அனுப்பும் போது,** என் நாமம் தரிக்கப் பட்ட என் ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி, ஜெபம் பண்ணி, என் முகத்தைத் தேடி, தங்கள் பொல்லாத

(6-ம் பக்கம் பார்க்க)

(5-ம் பக்க தொடர்ச்சி)

வழிகளை விட்டு திரும்பினால், அப்பொழுது பரலோகத்திலிருக்கிற நான் கேட்டு, அவர்கள் பாவத்தை மன்னித்து, தேசத்திற்கு க்ஷேமத்தைக் கொடுப்பேன்" *2 நாளா.7:13-14.* நியாயத்தீர்ப்புக்குட்பட்ட தேசத்திற்கும் நம்பிக்கை உண்டு. தேவ ஜனம் தன்னைத் தாழ்த்த வேண்டும். அவருக்கு நேராகத் திரும்ப வேண்டும். மனிதனால் கூடாதவைகள் தேவனால் கூடும்.

ஆதி நாட்களின் சீஷர்கள் ஜெபத்தின் வல்லமையை அறிந்து ஜெபத்தில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டார்கள். *(அப்.1:14, 2:42, 6:4)* அப்போது ஆண்டவர் தமது ஆவியானவரை ஊற்றி விசுவாசிகள் மீது தெய்வீக வல்லமையை அனுப்பினார். உலகமெங்குமுள்ள இழந்து போன மக்களை சந்திக்கவும், தேவ ராஜ்யத்தை விரிவுபடுத்தவும் அவர்களை அனுப்பினார்.

இன்று ஜெபிப்பது யார்?

ஜெபத்தின் வலிமை வேதபுத்தகத்தில் அதிகமாக குறிப்பிடப்பட்டிருந்தாலும் நமது கேள்வி ஜெபத்தில் இன்று உண்மையாக அவரை தேடுகிறவர்கள் யார்? என்பதுதான். தமது மகிமையை விளங்கப் பண்ணவும், மக்களைத் தம்மிடம் இழுத்துக்கொள்ளவும் தேவன் நமது ஜெபத்தை எதிர்பார்க்கிறார். ஜெபத்தின் வரம் அவரால் நமக்கு அளிக்கப்பட்ட விலையேறப்பெற்ற ஈவு.

E.M. பௌண்ட்ஸ் என்பவர், "கிறிஸ்தவர்களுக்கு ஜெபத்தின் வல்லமையைக் குறித்து தெளிவான அறிவு இல்லை. சிலருக்கு அந்த வல்லமையின் அனுபவம் இல்லை. சபை இந்த அனுபவத்தை அறியாதது போலிருக்கிறது. தேவன் இதனை சபையின் கரத்தில் கொடுத்திருக்கிறார். **இது ஒரு ஆசீர்வாதம்.** இது தேவனுடைய முடிவில்லாத ஞானத்தின் உறைவிடத்திலிருக்கிறது. சபை தேவனை மகிமைப்படுத்தும்படி அதை முழுமையாக பயன்படுத்தவில்லை" என்று எழுதியிருக்கிறார்.

இன்று யோசபாத்துக்கள் எங்கே? நெகேமியாக்களும் அன்னாள்களும் இல்லையே. தங்கள் முழு கவனத்தையும் தேவனுக்கு நேராகத் திருப்பி உத்தமத்தோடு, அவர் தமது சர்வ வல்லமையோடு, நம்மைச் சுற்றிலும் வாழும் மக்களுக்குத் தம்மைக் காண்பிக்கும்படி ஜெபிக்கிறவர்கள் யார்? நாம் அப்படிப்பட்ட ஜெப வீரர்களாயிருக்கலாமே. தேவனுடைய நோக்கத்தை நிறைவேற்றி அவர் நாமத்தை மகிமைப்படுத்துவோம்.

எழுப்புதலுக்கான ஒரு பாரம்

A burden for revival

Dave Butts

வேதபகுதி : சங்கீதம் 79

ஆவலோடு வாஞ்சித்து ஜெபிப்பவர்களுக்கு எழுப்புதல் ஏற்படுவது நிச்சயம். அனேகர் இன்று ஆவிக்குரிய விழிப்புணர்வைக் குறித்து பேசவும் ஜெபிக்கவும் செய்கிறார்கள். ஆனால் தேவன் நம்மில் வெளிப்படும்படியாக, நம்மில் ஒரு பாரத்தைத் தந்து வாஞ்சையோடு ஜெபிக்கச் செய்ய நம்மை ஒப்புக்கொடுக்கிறோமா? ஆதித்திருச்சபையில் தேவன் வல்லமையோடு வெளிப்பட்டது போல இன்று நம்மில் வெளிப்பட கிரயம் செலுத்த நாம் ஆயத்தமா?

தேவனுடைய சித்தத்தோடு இணைந்து ஜெபிக்க நாம் கற்றுக்கொள்ள வேதவசனங்களைக் குறிப்பிட்டு ஜெபிப்பது இன்றியமையாதது என்பதனை நான் கற்றுக்கொண்டேன். வேத வசனங்களோடு நான் ஜெபிக்கும்போது நான் முன்பு ஜெபிக்காதவிதமாக ஜெபிப்பதை உணருகிறேன். நாம் தேவனுக்கு முன்பாக நம்மை அர்ப்பணித்து எழுப்புதலுக்காக ஒரு பாரத்தைத் தரும்படியாக ஜெபிப்பதற்கு இது ஏதுவாயிருக்கிறது.

79-ம் சங்கீதத்தில் சங்கீதக்காரன் ஏறெடுக்கும் ஜெபம் எனக்கு அதிக தாக்கத்தை ஏற்படுத்தியது. இது எழுப்புதலுக்கான வல்லமையான ஜெபம். தேவ ஜனம் தாக்கப்பட்ட சூழலிலும், தேவ வாக்குத்தத்தங்கள் நிறைவேற்றப்படாமலிருந்தபோதும் இருதய நொறுங்குதலோடு ஏறெடுக்கப்பட்ட ஜெபம். இதை ஜெபமாக ஏறெடுக்கும்போது வேத அடிப்படையிலான எழுப்புதலின் பாரம் ஏற்படும்.

இந்த ஜெபத்தின் பகுதிகள் :

1. தற்கால சூழ்நிலையை உணர்ந்து ஆரம்பிப்பது :

இஸ்ரவேலர் எதிரிகளின் தாக்குதலால் நசுக்கப்பட்டார்கள். நம்பிக்கையற்ற இறுதி நிலைக்கு வந்தனர். 'நாங்கள் மிகவும் தாழ்த்தப்பட்டுப்போனோம்' வச.8. இந்த விதமான தாழ்வு நிலைக்கு வருமட்டும் சபை எழுப்புதலுக்காக பாரம் கொள்வதில்லை.

2. தேவ மகிமைக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் :

புறஜாதியார் இஸ்ரவேலரைப் பார்த்து இந்த துக்கமான நிலையில், **'உங்கள் தேவன் எங்கே?'** என்று கேட்டனர் வச.10. இவ்விதமான கேள்விகள் தேவ பிள்ளைகளுக்குப் பெரிய துக்கத்தை ஏற்படுத்தக்கூடியவை. இன்னும் உலகம் சபையைப் பார்த்து இதே கேள்வியைக் கேட்கிறது. **'உங்கள் தேவன் எங்கே?'**

3. தற்கால சூழ்நிலை, தேவ மகிமையைக் குறித்த வாஞ்சை, இவை உங்களை விண்ணப்பம் செய்யத் தூண்டும் :

இப்படிப்பட்ட நிலையில்தான் இஸ்ரவேலர் இரக்கத்திற்கும் விடுதலைக்கும், மன்னிப்பிற்கும் ஜெபித்தனர். 'பூர்வ காலத்து அக்கிரமங்களை எங்களுக்கு விரோதமாக நினையாதேயும், உம்முடைய இரக்கங்கள் சீக்கிரமாய் எங்களுக்கு நேரிடுவதாக ..... எங்களை விடுவித்து எங்கள் பாவங்களை நிவிர்த்தியாக்கும்' வச.8:9. இது தனிப்பட்ட வகையான ஜெபம். தேவ ஜனத்தின் தேவை முக்கியப்படுத்தப்பட்டு தேவ தயவை மறுபடியும் பெற்றுக் கொள்ள வேண்டுதல் செய்யப்படுகிறது.

4. ஜெபத்தினை முன்னேற்றி தேவனை நோக்கி இன்னொருபடி சூழ்நிலைக்குள் செல்லுகிறான் வச.10:12.

உண்மையாகச் சொன்னால் "தேவனே எதிரியின் குற்றச்சாட்டுகளுக்கு நீர் பதிலளியும். உமது செயல்களால் அவர்களுக்குப் பதில் செய்யும். உமது ஜனத்தின் நிலையால் உம்மீது குவிக்கப்பட்ட அவமானத்திற்குப் பதில் செய்யும்" என்று தாவீது வேண்டுகிறார்.

5. இத்தகைய ஜெபத்தின் விளைவு ஆராதனையும் துதியும் (வச.13 படிக்க)

தேவனுடைய செயலை எதிர்பார்த்திருப்பதால் வரும் விளைவு இங்கு குறிப்பிடப்படுகிறது. முழுமையான பலத்த அசைவு ஏற்படும் முன்னேயே தேவ ஜனம் ஆராதனை செய்கிறது. மேலும் அடுத்த தலைமுறையினருக்கும் அர்ப்பணம் கடந்து செல்கிறது.

எழுப்புதலுக்காக ஜெபிப்பதால் உடனே எழுப்புதல் ஏற்படும் என்பது நிச்சயமல்ல. தேவனுடைய ஒரு புதிய செயலுக்கு நாம் நிலத்தைப் பண்படுத்துகிறோம். அந்த நிலம் மனித இருதயம். அங்கு வாஞ்சையோடு ஜெபம் எழும்புவதால் எழுப்புதல் ஆரம்பித்து தேவ ஜனங்களுக்குள் எழுப்புதலின் பாரத்தை ஏற்படுத்துகிறது. இந்த ஆயத்த நிலையில் ஆண்டவர் பரலோகத்திலிருந்து மழையைப் பொழிகிறார்.

எழுப்புதல் என்ற தமது நூலில் மார்ட்டின் லாய்டு ஜோன்ஸ், ஜெபம் என்ற ஆயத்தத்தை குறித்து இப்படி எழுதியிருக்கிறார். "நாம் மேற்பரப்பான தேவ ஆவியைப் பெற்றிருப்பதில் திருப்தியடைகிறோம். எனவே பிறரை ஆண்டவரிடம் இழுத்துவர நம்மிடம் எதுவும் இல்லை. இதை கவனிக்க நாம் நேரம் எடுப்பதுமில்லை. இது நமது பிரச்சனையாயிருக்கிறது." மேலும் "எழுப்புதலுக்கான தவிர்க்க முடியாத தொடர் ஆரம்பம் தேவனுக்கான தாகமாகும். அந்தத் தாகம் ஜீவனுள்ள தேவனை அறிந்துகொள்ளும் தாகம். அவர் செயல்படுவதைக் காண வாஞ்சிக்கும் தாகம். அவரையும் அவரது வல்லமையையும் கொண்டு எதிரிகளை சிதறடிக்கும் தாகம். தேவனுக்கான தாகம், அவரது மகிமையை வெளிப்படுத்தும் வாஞ்சை ஆகியவை எழுப்புதலுக்கு இன்றியமையாத முதற்படிகள்" என்று அவர் தொடர்ந்து குறிப்பிடுகிறார்.

எழுப்புதலுக்கான நமது ஜெபங்கள் தேவனுக்கான தாகத்தை ஏற்படுத்தி, அது நம்மில் மட்டுமல்ல நம்மைச் சூழ வாழும் மக்களின் வாழ்விலும் தாக்கத்தை ஏற்படுத்தட்டும்.

வாஞ்சையோடு ஜெபம் எழும்புவதால் எழுப்புதல் ஆரம்பித்து தேவ ஜனங்களுக்குள் எழுப்புதலின் பாரத்தை ஏற்படுத்துகிறது.

ஆவிக்குரிய நிறைவுக்காக சுத்திகரிக்கப்படுதல்

Cleansing for spiritual fullness

Ruth Paxon (1889-1949)

தூய ஆவியானவரை துக்கப்படுத்தாதிருங்கள் எபே.4:30

துக்கப்படுத்துவதற்கும் அன்புக் கும் தொடர்புண்டு. உங்களை நேசிக் காத ஒருவர் உங்களை துக்கப்படுத்த முடியாது. ஆவியானவர் அன்பும், உருக்க மும், எளிதில் துக்கப்படக் கூடியவருமா யிருக்கிறார். அவரை நாம் துக்கப் படுத்தும்போது நம்மை மிகவும் நேசிக்கிற ஒருவரை துக்கப்படுத்து வதாகும். அவரது குணநலன்களை வெளிப்படுத்தும் அவரது நாமங்கள் மூலமாகவே எது அவரை துக்கப்படுத்து கிறது என்பதை நாம் அறிய முடியும்.

1. அவர் சத்திய ஆவியானவர் :–

யோவான் 14:17 - பொய், ஏமாற்று, மாய்மாலம் போன்ற யாவும் அவரை துக்கப்படுத்தும். உங்கள் வாழ்வில் பொய்மை இருந்தால், உங்கள் இருதயம் சுத்தப்படுத்தப்படும் வரை சத்திய ஆவியானவரால் நிரப்பப்படவே முடியாது.

2. அவர் விசுவாசத்தின் ஆவியானவர்:–

2 கொரி.4:13 - சந்தேகம், அவிசு வாசம், நம்பிக்கையின்மை, கவலை, ஏக்கம் போன்றவை அவரை துக்கப்படுத் தக்கூடியவை. தேவ வசனத்தில் சந்தேகம் ஏற்படுகிறதா? இரட்சிப்பின் அடிப்படை சத்தியங்களில் அவிசுவாசமா? உங்கள் வியாபாரம், குடும்பம், ஆரோக்கியம் இவைகளைக் குறித்துக் கவலைப்படுகிறீர் களா? அப்படியானால் விசுவாசத்தின் ஆவியானவரை துக்கப்படுத்துகிறீர்கள்.

3. அவர் கிருபையின் ஆவியானவர்:–

எபி.10:29 - கடினதன்மை, கசப்பு, இரக்கமின்மை, பொறாமை, நன்றிக் கேடு, மன்னியாமை போன்ற தன்மைகள் உங்களில் காணப்பட்டால் கிருபையின் ஆவியானவர் உங்களில் தங்கியிருக்க முடியாது. யாரிடமாவது பேசாமலிருக்கி றீர்களா? யாரிடமாவது சண்டையிட்டீர் களா? தேவனுக்கு நேராகக் கசப்புடனிருக் கிறீர்களா? சூழ்நிலைகள் பாதகமாகும் போது முறுமுறுக்கிறீர்களா? இந்த நிலை களில் சுத்திகரிக்கப்படாமல் ஆவியால் நிரப்பப்படும்படி ஜெபிக்க வேண்டாம்.

4.அவர்தூய்மையின் ஆவியானவர்:–

ரோமர் 1:4 - ஆவியானவர் மிகவும் தூய்மையானவர். அசுத்தமான தும் கீழ்த்தரமானதுமான செயல்கள் நம்மில் காணப்பட்டால் ஆவியானவர் துக்கமடைவது நிச்சயம். அசுத்த எண் ணங்களை மனதில் வைத்திருப்பது, அசுத் தமான புத்தகங்களை வாசிப்பது, கீழ்தர மான படங்களை வீட்டு சுவர்களில் மாட்டி வைப்பது, அசுத்தமான பாடல் களைக் கேட்பது போன்ற யாவும் ஆவி யானவரை துக்கப்படுத்தக் கூடியவை.

5. ஞானத்தின் ஆவியானவர் :–

எபேசி.1:17-அறிவீனம், அகந்தை, முரட்டுத்தன்மை, தவறுகள் போன்றவை கள் ஆவியானவரை துக்கப்படுத்தும் காரியங்கள். தூய ஆவியானவர் வசனத் தின் ஆழமான சத்தியங்களைப் போதிக்க ஆயத்தமாயிருக்கிறார். வேத அறி வின்மை, சொந்த அறிவிலே அகந்தை, நமது திறமையிலே சார்பு, புத்தியீனமான வழிகள் போன்றவை அவரை துக்கப் படுத்தும்.

6. அவர் வல்லமை, அன்பு, கண்டிப்பு ஆகியவற்றின் ஆவியானவர்:–

2 தீமோ.1:17- நமது பலவீனங்கள், கனியின்மை, ஒழுங்கீனம், கட்டுப் பாடின்மை ஆகியவை அவரை துக்கப் படுத்துகின்றன. உங்களைச் சூழ இரட் சிக்கப்படாதவர்களும், சுவிசேஷத்தை அறியாதவர்களுமான ஆயிரக்கணக்கான மக்கள் வாழுகிறார்கள். சிலர் உங்கள் குடும்பத்தினராகவுமிருக்கலாம். அவர் களை நீங்கள் கிறிஸ்துவினண்டை கொண்டுவராவிடில் தேவவல்லமையின் வாய்க்கால்களாகிய உங்களில் பாவம் தடையாயிருக்கிறது. உங்களுக்கெதிராகத் தவறு செய்தவர்களிடம் கசப்பும், வெறுப்பும் கொண்டிருக்கிறீர்களா? இச்சைகளுக்கும் பெலவீனங்களுக்கும் இடமளித்துவிட்டீர்களா? அப்படி யானால் ஆவியானவர் துக்கப்படுகிறார்.

7. அவர் வாழ்வின் ஆவியானவர்:–

ரோமர் 8:2 - நிர்விசாரம், வெது வெதுப்பான நிலை, மந்தநிலை, மரித்த நிலை ஆகியவை ஆவியானவரை துக்கப் படுத்தக்கூடியவை. வேத புத்தகத்தைப் பலநாட்கள் படிக்காமலிருக்கிறீர்களா? ஜெபக் கூடுகைகளுக்குச் செல்வதைப் பார்க்கிலும் கேளிக்கை அரங்கங்களை நாடுகிறீர்களா? ஆவியானவர் துக்கப் படுத்தப்படுகிறார்.

8. அவர் மகிமையின் ஆவியானவர் :–

1 பேதுரு 4:14 - லௌகீகம், மாம்ச சிந்தை இருக்கிறதா? இவைகளால் ஆவி யானவரை துக்கப்படுத்திவிட்டீர்கள். அவர் மகிமைப்படுத்தப்பட வேண்டியவர்.

ஆவியானவர் நம்மில் வாசம் செய்து கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலும் நாம் வளரவும், அனுதினமும் அவரது சாயலைப் பெறவும் விரும்புகிறார். இதற்குத் தடையான யாவும் அவரை துக்கப்படுத்தும். தூய ஆவியானவர் விரும்பாதவற்றை நாம் அறிந்தும் அனுமதித்தால் நீங்கள் பாவத்தை அவரை விட அதிகமாக நேசிக்கிறீர்கள் என்பது தான் பொருள். இத்தகைய தன்மையால் அவர் துக்கப்படுத்தப்படுகிறார்.

ஆவிக்குரிய தன்மை தூய ஆவி யின் இசைவான உறவை சார்ந்தது. அறிந் தும் பாவஞ்செய்தால் துக்கப்படுத்தப் பட்ட ஆவியோடு நாம் வாழுகிறோம். நிரப்பப்பட வேண்டுமானால் நாம் சுத்திகரிக்கப்பட வேண்டும். தேவன் விரும்புவது விலையுயர்ந்த பாத்திரங் களல்ல. சுத்தமான பாத்திரங்களே.

ஆவியை அவித்துப் போடாதிருங்கள் 1தெச.6:19

சாத்தானிடம் 'ஆம்' என்று சொல்லி பாவத்தில் நுழைந்து ஆவியை அவித்துப்போடுகிறோம். அது போலவே நம்மை சுத்திகரிப்பதற்காக தேவன் அழைக்கும்போது 'மாட்டோம்' என்ப தும் ஆவியானவருக்கு எதிரான செயலா கும். நீங்கள் தேவனை விட பாவத்தை நேசிப்பதை வெளிப்படுத்துகிறீர்கள். விசுவாசியை தேவ சித்தத்திற்குள் கொண்டு வருவது தூய ஆவியானவரின் முக்கியப் பணி. சுய சித்தம் நம்மில் காணப்படுகிறது. அது புரட்சியாக வெடிக்கிறது. எல்லாவற்றிலும் தேவ சித்தம் செய்வதே இதற்கு நிவாரணம். நமது இருதயம் தேவனுடைய சித்தத்தை ஒரு கட்டளையாக கொண்டு விதிவிலக் கின்றி அனுதினமும் செயல்பட வேண்டும்.

தூய ஆவியானவர் நம்மில் தங்கி நம்மைக் கழுகி சுத்திகரிக்கிறார். மூடப் பட்ட இருட்டறையிலிருக்கும் தூசுகள் கண்ணுக்குப் புலப்படுவதில்லை. ஆனால் கதவு ஜன்னல்கள் திறக்கப்பட்டு ஒளி உள்ளே பிரவேசிக்கும்போது அனைத்து தூசிகளும் நன்கு புலப்படும். அதே போல் தேவ ஆவியானவர் நம்மில் வரும் போது நமது பாவங்கள் வெளிச்சத்துக்குக் கொண்டு வரப்படும். எவ்வளவாக அவர் நம்மை நிரப்புகிறாரோ அவ்வளவு அதிகமாகப் பாவம் வெளிப்படுத்தப் பட்டு உணர்த்தப்படும்.

தேவன் நம்மைக் கிட்டிச் சேரும் அளவில் நாம் பாவத்தைக் குறித்த விழிப் புணர்வுடனிருப்போம். சில நாட்கள், மாதங்கள், அல்லது வருடங்களுக்கு முன் னால் நீங்கள் பாவம் என்று அழைக்காதது இப்போது பாவமாகத் தென்படும்.

எப்படி சுத்திகரிக்கப்படுகிறோம்

எது அவரை துக்கப்படுத்துகிறது என்பதை தூய ஆவியானவர் நமக்குக் காண்பிப்பார். தொடர்ந்து தேவன் நம்மிடம் எதிர்பார்ப்பது உத்தம இருதயத்திலிருந்து எழும்பும் பூரணமான பாவ அறிக்கை. "நம்முடைய பாவங் களை நாம் அறிக்கையிட்டால், பாவங் களை நமக்கு மன்னித்து எல்லா அநியா யத்தையும் நீக்கி நம்மை சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ள வராயிருக்கிறார்" 1 யோவா.1:9.

பாவ அறிக்கைக்குப் பதிலாக தேவன் எதையும் அங்கீகரிக்கப்பதில்லை. பொய்யான பாவ அறிக்கையை அவர் அறிவார். பாவ அறிக்கைக்குப் பதிலாக நன்கொடைகள், நற்கிரியைகள், நீண்ட ஜெபம் போன்றவை ஏற்றுக் கொள்ளப் படுவதில்லை. பாவத்திற்கான தண்டனை யால் துக்கப்படுவதோ, பாவத்தை ஒத்துக் கொள்ள பலவந்தப்படுத்தப்படுவதால் கடமைக்காக பாவ அறிக்கை செய்வதோ, அரைகுறையான பாவ அறிக்கையோ அங்கீகரிக்கப்படுவதில்லை.

(8-ம் பக்கம் பார்க்க)

(7-ம் பக்க தொடர்ச்சி)

தேவனுக்கு எதிராகச் செய்யப் பட்ட பாவங்கள் தேவனிடம் அறிக்கை செய்யப்பட வேண்டும் சங்.51:4. பிறருக்கு விரோதமாக செய்யப்பட்ட பாவங்கள் அவர்களிடம் அறிக்கை செய்யப்பட வேண்டும் யாக்.5:16. கூட்டமாக சேர்ந்து தவறு செய்யும் போது பகிரங்க பாவ அறிக்கை அவசியமாகிறது யோசு.7:19-25.

சுத்திகரிப்பின் அளவு

"இப்படிப்பட்ட வாக்குத்தத்தங் கள் நமக்கு உண்டாயிருக்கிறபடியினால், பிரியமானவர்களே, மாம்சத்திலும் ஆவியி லும் உண்டான எல்லா அசுசியும் நீங்க நம்மை சுத்திகரித்துக் கொண்டு பரிசுத்த மாகுதலை தேவபயத்தோடே பூரணப் படுத்தக்கடவோம்" 2 கொரி.7:1.

சுத்திகரிப்பு அனைத்து மாம்சத்தி லும் ஆவியிலும் உண்டான அசுசியை நீக்க வேண்டும். தேவன் விரும்புகிறபடி வேறுபாடு ஏற்படவேண்டும்.

தேவனுடைய சுத்திகரிப்பு உள்ளான விருப்பங்களையும் வெளிப் படையான கிரியைகளையும் எட்டக் கூடியது. அதாவது நமது அந்தரங்க பகுதிகளிலிருந்து மேலோட்டமான பகுதிகளும் சுத்திகரிக்கப்படுகின்றன. தேவனுடைய பார்வையில் இச்சையான பார்வை இச்சையான செயலுக்கு சமமா னது. தனது கரத்தில் இரத்தம் படிந்த ஈட்டியை வைத்திருக்கும் கொலைபாத கனும், உள்ளத்தில் பகைமையை வைத் திருப்பவனும் அவர் முன்னால் சமம்.

முற்கால பரிசேயரைப் போல நீங்கள் வெள்ளையடிக்கப்பட்ட கல்ல றையைப் போலிருக்கிறீர்களா? அவை வெளியே அழகாகக் காட்சியளிக்கும். ஆனால் உள்ளேயோ அசுத்தங்களால் நிறைந்திருக்கும். உட்புறமும், வெளிப் புறமும் சுத்தமாக்கும்படி தேவன் கட்டளையிடுகிறார். உங்கள் வாழ்வில் பாவத்தின் வேர் பல ஆண்டுகளாக மறைந்து இருக்கிறதா? வேரானது பரவிப் பெருகும் தன்மையுடையது. பாவமும் உங்கள் வாழ்வில் இவ்வாறே பரவக் கூடியது. அனைத்து பாவங்களும் கழுகி சுத்திகரிக்கப்பட வேண்டும்.

தனது ஜனங்களின் பாவம் நீக்கப்படும் வரைக்கும் தேவன் தமது வல்லமையின் பிரசன்னத்தை வெளிப் படுத்த முடியாது. எரிகோ கைப்பற்றப் பட்டபோது எந்த ஒரு கொள்ளைப் பொருளையும் அங்கிருந்து எடுக்கக் கூடாது என்று தேவன் கூறியிருந்தார். ஆனால் ஆகான் என்பவன் பொன், வெள்ளி, பாபிலோனிய சால்வை ஆகிய வற்றை இச்சித்து தன் கூடாரத்தில் புதைத்து வைத்தான். எல்லாவற்றையும் காண்கிற தேவனைத் தவிர வேறு எந்த கண்களும் அதைக் காணவில்லை. இதினிமித்தம் இஸ்ரவேலர் தோல்வி யினைத் தழுவினர். யோசுவா தரையில் முகங்குப்புற விழுந்து கிடந்து ஜெபித் தான். தோல்வியின் காரணம் தேவனல்ல, பாவச் செயல்தான்.

'ஜெபித்தது போதும்' என்று யோசுவாவிடம் தேவன் கட்டளை யிட்டார். சாபத்தீடானவைகள் அவர் களிடமிருக்கும் வரை தமது வல்ல பிரசன்னத்தை அளிக்க முடியாது எனக் கூறினார். இச்சித்து எடுக்கப்பட்டவை களும், அதைக் களவு செய்து ஒளித்து வைத்ததும் அறிக்கை பண்ணப்பட்டது. ஆகான் சாபப் பொருட்களோடு அழிக்கப்பட்டான். வெற்றி கிடைத்தது.

தேவனுடைய ஆசீர்வாதமும், வல்லமையும் வெளிப்பட உங்கள் சபை யில் ஆகான் தடையாயிருக்கிறானா? அறிந்து செய்யும் பாவங்கள் கீழ்ப்படி யாமை, தேவசித்தத்தை எதிர்த்தல் போன்ற பாவங்களில் துணிகரமாகத் தொடர்ந்துகொண்டு ஊக்கமாக ஆவி யானவரின் நிறைவுக்காக ஜெபிக்க வேண்டாம், தோல்விதான்.

அப்படியானால் தேவன் சொல்லுவது என்ன? முகங்குப்புற விழுந்திருப்பதிலிருந்து எழும்பு. இங்கு பாவமிருக்கிறது. இது அழிக்கப்படா விட்டால் நான் உன்னுடனிருக்க முடி யாது. "உங்களைப் பரிசுத்தம் பண்ணிக் கொள்ளுங்கள்" யோசுவா 10:13.

நாம் ஆவியால் நிரப்பப்பட சுத்தி கரிப்பு வேண்டும்

"மகிமையில் அங்கே ஒருவர்
அவரது வாழ்வு எனக்காக
அவர் பரிசுத்தமும் தூய்மையுமானவர்
வெற்றி வீரர், சுயாதீனர்
அவர் ஞானமும் அன்புமுள்ளவர்
அவர் உருக்கமானவர்
அவரது மகிமையின் வாழ்வில்
எனது வாழ்வுமிருக்க வேண்டும்."

தேவன் தமது வார்த்தையை கனப்படுத்துகிறார் மேலும் அவரது வார்த்தையிலுள்ள நமது விசுவாசத்தையும் கனப்படுத்துகிறார்

God honours His word And God honours our faith in His word

F.F. Basworth

"அன்றியும் உங்களுக்கு ஆவியை அளித்து உங்களுக்குள்ளே அற்புதங் களை நடப்பிக்கிறவர், அதை நியாயப் பிரமாணத்தின் கிரியைகளினாலேயோ, விசுவாசக் கேள்வியினாலேயோ, எதி னால் செய்கிறார்? அப்படியே ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான். அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது" கலா.3:5-6.

வாக்குத்தத்தங்களைக் கொடுக் கிற தேவன் விசுவாசிக்கிறவர்களுக்கு அதை நிறைவேற்றுகிறவர். அதற்கு ஆபிரகாம் எடுத்துக்காட்டாயிருக்கிறார்.

"தேவன் வாக்குப்பண்ணினதை நிறைவேற்ற வல்லவர் என முழு நிச்சயத் துடன் நம்பி விசுவாசத்தில் வல்லவனா னான்" என்று ரோமர் 4:21-ல் படிக்கி றோம். தன் சரீரம் செத்துப் போன தையும், சாராளுடைய கர்ப்பம் செத்துப் போனதையும் எண்ணாதிருந்தான் ரோமர் 4:19. இயற்கை நியதியின்படி ஈசாக்கின் பிறப்பு கூடாததுதான்; ஆனால் அதை சந்தேகப்படுவதற்கான ஒரு காரண மாக அவன் எடுக்கவில்லை ஆதி.17:21.

முற்றிலும் நம்பிக்கையற்ற சூழலில் தேவனுடைய வாக்கை நம்பி ஆபிரகாம் விசுவாசத்தில் உறுதியாயிருந் தான். அவன் விசுவாசத்தில் உறுதியா யிருந்தபடியால் அற்புதத்தைப் பெற்றான்.

அவனுடைய விசுவாசம் சோதிக் கப்பட்டபோதும் அவன் தனது உறுதி யை விட்டுவிடவில்லை. முற்றிலுமாக தேவனுடைய வார்த்தையை சார்ந்து வாழ்ந்தான். தன் ஒரே பேறான குமார னாகிய ஈசாக்கை பலியிட தேவன் சொன்னபோதும் அவன் நம்பிக்கையை விட்டு விலகவில்லை.

சூழ்நிலைகளால் தாக்கமடைந்து தேவனை நம்புவதற்கு நாம் தயங்கினால் தேவனுடைய உத்தமத்தைக் கேள்வி கேட்கிறவர்களாயிருப்போம்.

தனது ஜனங்களின் பாவம் நீக்கப்படும் வரைக்கும் தேவன் தமது வல்லமையின் பிரசன்னத்தை வெளிப்படுத்த முடியாது.

Contact:

VARUKAYIN THOOTHAN
7, Newport Street, W.C.C. Road,
Nagercoil - 629 001.
Kanyakumari District,
SOUTH INDIA.

Mobile: +91 095432 21008
Whatsapp: +91 094897 40295
email: varukayinthoothan@hotmail.com

சிந்தனைக்கு

முற்றிலும் நம்பிக்கையற்ற சூழலில் **தேவனுடைய வாக்கை** நம்பி ஆபிரகாம் விசுவாசத்தில் உறுதியாயிருந்தான். அவன் விசுவாசத்தில் உறுதியாயிருந்த படியால் **அற்புதத்தைப்** பெற்றான்.

துக்கப்படுத்துவதற்கும் அன்புக்கும் தொடர்புண்டு. உங்களை நேசிக்காத ஒருவர் உங்களை துக்கப்படுத்த முடியாது. ஆவியானவர் அன்பும், உருக்கமும், எளிதில் துக்கப்படக் கூடியவருமாயிருக்கிறார். அவரை நாம் துக்கப்படுத்தும்போது நம்மை மிகவும் நேசிக்கிற ஒருவரை துக்கப்படுத்துவதாகும்.

இடைவிடாமல் ஜெபம் செய்வது என்பது ஒரு நிமிடம் கூட விடாமல் ஜெபிப்பது அல்ல, ஆனால் ஜெபத்தை விட்டுவிடாமல் **தொடர்ந்து** ஜெபிப்பதாகும்.

நீங்கள் **ஜெபித்த பின்பு** ஜெபித்ததை விட கூடுதலான காரியங்களைச் செய்ய முடியும். ஆனால் நீங்கள் **ஜெபிக்காவிட்டால்** கூடுதலாக எதையும் செய்ய முடியாது.

Printed and Published by Wesley Devadason and Printed at Varukayin Thoothan Offset Press and Published at 3/8, Newport Street, Nagercoil - 629 001.
Editor : Wesley Devadason